1978 மார்ச் 3]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நீலகிரி மாவட்டத்தில் எருமாடு என்ற கிராமத்தில் கொத்தடிமை யிலிருந்து விடுவிக்கப்பட்ட 70 பணியர்கள் குடியமர்த்தப்பட் டிருக்கிறார்கள். அவர்களுக்காக 104.58 ஏக்கர் நிலம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. 4,59,000 ரூபாய் இத்திட்டத்திற்குச் செல வாகும் என்று மதிப்பீடு தயாரித்திருக்கிறது இந்த அரசு.

தீண்டாமைக் குற்றங்கள்.

*376. வினு—திரு. என். கிட்டப்பா:—மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:—

தீண்டாமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 1976–77 ஆம் ஆண்டில் எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : குடிமை உரி மைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கடந்த 1976–77ஆம் ஆண்டில் 2,957 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

திரு. ரா. உமாநாத். தலைவரவர்களே, இன்றைக்கும் நம் முடைய மாநிலத்தில் பல இடங்களில் அரிசனங்களை சமூக பகிஷ் காரம் செய்வது நடந்து கொண்டிருக்கிறது. தீண்டாமை தடை அதிகாரிகளும், போலீசும், நிலப் பிரபுக்களும் அதற்கு உடந் தையாக இருக்கிறார்கள். ஆகவே, என்னுடைய கேள்வி, இன் றைய தீண்டாமைத் தடுப்புச் சட்டம் எந்த அளவுக்குச் செயல் படுத்தப்படுகிறது? தீண்டாமை நிலைமை இன்றைக்குத் தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு இருக்கிறது? இத்திட்டத்தைச் சரி யாகச் செயல்படுத்த 'என்போர்ஸ்மென்ட் அதாரிட்டீஸ் ப்ராப் பராக ஆக்ட்' பண்ணுவதற்கு 'ஸ்ட்ரீம் லைன்' செய்து ஒரு 'ஸ்பெஷியல் என்குயரி கமிஷன்' அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, தமிழகத்தில் தீண்டாமை முறை எந்த அளவுக்கு இருக் கிறது என்பதை நாம் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளிலே பார்க்கிறோம். இந்த ஜாதி ஒழிப்பு முறையை மேற்கொள்ள வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையும் ஆகும். தீண் டாமைக் குற்றங்களைக் குறைக்கத்தான் ஆங்காங்கே இருக்கிற மாவட்ட காவலர்கள் தீவிரமாக ரோந்து வருகிறார்கள். எங்கெங்கே இப்படிப்பட்ட பிரச்சனை இருக்கிறதோ அங் கங்கே உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கிறார்கள். ஏதாவது குறிப்பிட்ட இடத்தில் குறைபாடு இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் உடனடியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதைத் தெரிவித் துக்கொள்கிறேன்.

[1978 மார்ச் 3

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்கு போடப்பட்டதா? அந்த வழக்குகள் என்ன ஆனது என்கிற விவரம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, 1976-77ஆம் ஆண்டில் 2,957 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் மீது 2,630 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. வழக்குகளின் முடிவுகள் பின்வருமாறு:—

988 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. 713 வழக்குகளில் விடுதலை செய்யப்பட்டது. 14 வழக்குகள் தவறான தகவலால் பதிவு செய்யப்பட்டன. 152 வழக்குகள் அறிக்கைக்காக அனுப்பப்பட்டது. 37 வழக்குகள் ஆய்வில் உள்ளன. 653 வழக்குகள் வழக்கு மன்றத்தில் உள்ளன. 24 வழக்குகளில் குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டார்கள்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இவ்விதம் தீண்டாமைக் குற்றங்களுக்காக தண்டனை அளிக்கப்பட்டவர்கள் ஊராட்சி, நகராட்சி போன்ற உள்ளாட்சி மன்றங்களின் தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று தடை விதித்து சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. அப்படிச் சட்டம் இருந்தும், அரசாங்கம் விரும்பினால் விதிவிலக்கு அளிக்கலாம் என்று ஒரு திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இது உள்ளாட்சி அமைச்சரைக் கேட்க வேண்டிய கேள்வி.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியையும் அதன் தொடர்பானவற்றையும் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.